**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC. 138/2024 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.1 |
| Name : | ருக்குமணி |
| Father's Name/Husband Name: | கார்த்திகேயன் |
| Village : | பாண்டகபாடி |
| Taluk : | வேப்பந்தட்டை |
| Age : | 39 /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 07.05.2026

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரிகள் 1 முதல் 3 வரை ஆஜர்.)**

**சாட்சியானவர் கு.வி.மு.ச பிரிவு 311ன் கீழ் மனு அனுமதிக்கப்பட்டு எதிரிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் எனது முதல் விசாரணியில் எதிரி சுந்தரம் அடிக்கடி போன் செய்து, ஒழுங்கு புண்டையா பணத்தை எடுத்த வைங்கடி தேவிடியா ஊர வைத்தவளே என்று தகாத வார்த்தையால் பேசினார் என்று சொன்ன விவரங்களை எனது புகாரிலோ போலிசார் விசாரணையிலோ சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். மேலும், எதிரி சுந்தரத்தின் மகன் பொன்னுசாமி தேவிடியா ஊர ஓத்தவளே என்று தகாத வாதர்த்தைகளால் பேசி செருப்பை கழட்டி முகத்திற்கு நேராக வீசினார் என்றும் தேவிடியா நீயெல்லாம் எதற்கு உசுரோட இருக்கிற சுடுகாட்டில் நேீயெ குழித் தோண்டி படுத்துக்கடி, நீ செத்துப் போடி என்ற எதிரி பொன்னுசாமி பேசினார் என்றும் பெரியவடகரையைச் சேர்ந்த சீட்டில் உறுப்பினராக இருக்கும் சிவக்குமார் என்பவர் தேவிடியா ஊஓர ஓத்தவளே உன்ன அடிச்சா எவன்டி கேப்பான் பல்ல உடைப்படன்டி

தேவிடியா புண்ட என்று மூன்று பேருமே அசிங்க அசிங்கமாக பேசி மானபங்கப்படுத்தி கையை பிடித்து கீழே தள்ளினார்கள் என்று எனது முதல் விசாரணையில் கூறிய விவரங்களை நான் போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.

கடந்த 01.07.2024 அன்று இரவு 9.15 மணிக்கு வடகரையில் உள்ள சுந்தரம் என்பவரின் கடையில் சம்பவம் நடந்தது என்ற விபரத்தை புகாரிலும் போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அதே போல, பொது மக்கள் முன்னிலையில் அசிங்கமாக பேசி மானப் பங்கப் படுத்தி கொலை மிரட்டல் விடுத்து அன்று இரவு 10.00 மணியளவில் அவமானம் தாங்க முடியாமல் களை கொல்லி மருந்தை குடித்து தற்கொலை செய்ய முயன்றதாக எனது முதல் விசாரணையில் கூறிய விவரங்களை புகாரிலும் போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். போலிசார் 04.07.2024 அன்று சம்பவம் குறித்து என்னை விசாரணை செய்ததாக எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் போலிசார் எந்த தேதியில் எப்போது புகார் வாக்குமூலம் வாங்கினார்கள் என்றால் 04.07.2024 ம் தேதி மாலை 03.00 ல் இருந்து 04.00 மணியளவில் வாங்கினார்கள். அந்த புகார் வாக்குமூலம் போலிசார் எழுதி வாங்கனார்களா அல்லது வெற்றுத்தாளில் வாங்கினார்களா என்றால் போலிசார் எழுதி தான் வாங்கனிார்கள். அந்த புகார் வாக்குமூலத்தில் என்ன எழுதியிருந்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. அந்த புகார் வாக்குமூலத்தில் எத்தனை கையொப்பம் இட்டேன் என்றால் எத்தனை பக்கம் எழுதினார்களோ அத்தனை பக்கத்திலும் கையொப்பம் போட்டேன். எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியும். என்னிடம் புகார் வாக்குமூலம் வாங்க வந்த போலிஸ் ஏட்டா அல்லது எஸ்.ஐ ஆ அல்லது பெண் காவலரா என்றால் ஆண் காவலர் வாங்கினார். பாண்டகபாடிக்கும் பெரியவடிகைரைக்கும் இடையே எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 2 கீ.மி இருக்கும், எனக்கு சரியாக தெரியாது. சம்பவத்தன்று எதிரி சுந்தரத்தின் மகன் எனது வீட்டிற்கு வந்து அவர் வீட்டிற்கு என்னை அழைத்துச் சென்றாரா அல்லது நானே அவர் வீட்டிற்கு சென்றேனா என்றால் அவர் தான் என்னை அழைத்துச் சென்றார் இந்த விபரத்தை நான் எனது புகாரிலும் போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். சம்பவம் நடக்கும்

போது சம்பவ இடத்தில் பொது மக்கள் கூட்டம் அதிகமாக இருந்ததா என்றால் அதிகமாக இருந்தது. அரசு மருத்துவமனையில் உள் நோயாளியாக எத்தனை நாட்கள் நான் சிகிச்சையில் இருந்தேன் என்றால் ஒரு வாரம் இருந்தேன். அங்கு எனக்கு மருத்துவர் சிகிக்சை அளித்தார். எதிரி சுந்தரம் சீட்டு பணம் பிடிப்பவர். இரண்டாம் எதிரி பொன்னுசாமி எதிரி சுந்தரத்தின் மகன் என்றால் சரிதான். மூன்றாவது எதிரி சிவக்குமார் சீட்டு பிடிப்பதில் உறுப்பினர் என்றால் சரிதான். சீட்டு பணம் எவ்வளவு எடுத்தோம் என்றால் எனக்கு சரியாக நினைவில்லை. சீட்டு பணம் எத்தனை மாதமாக கட்டவில்லை என்றால் சீட்டு முடிந்து ஒரு மாதம் தான் கட்டவில்லை. அதே மாதத்தில் தான் பிரச்சனை நடந்தது. இந்த விவரங்களை புகாரிலும் போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. ஏலச் சீட்டில் எத்தனை பேர் உறுப்பினர்களாக இருந்தார்கள் என்றால் 20 பேர். நாங்கள் பாக்கி சீட்டு பணத்தை கட்டாமல் இருந்ததால் தான் ஒன்றாம் எதிரி சுந்தரம் அந்த பணத்தை கேட்டதால் தான் அவருக்கும் எனக்கும் முன்விரோதம் ஏற்பட்டு அவர் மீது பொய்யாக புகார் கொடுத்து சீட்டு பணத்தை மோசடி செய்து ஏமாற்ற வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் எதிரிகளின் மீது பொய் வழக்கு போட்டால் பணம் கேட்க மாட்டார்கள் என்ற கெட்ட எண்ணத்தில் நடக்காத சம்பவத்திற்கு பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் மருத்துவமனைக்கு செல்லவில்லை எந்த சிசிச்சையும் எடுத்துக் கொள்ள வில்லை என்றால் சரியல்ல. அந்த தேதியில் நான் சிசிக்சை எடுத்துக் கொண்டதற்கான ஆதாரத்தை வாங்கிக் கொள்ளலாம். சீட்டு பணத்தை ஏமாற்றி மோசடி செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் சம்பவம் நடக்காத நிலையில் இந்த பொய் புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.